Community titles (abolition)

* 200 *Q.*—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal for removing the community titles after the names of persons in Government records?

The Hon. Sri M. BAKTAVATSALAM : No, Sir.

திரு. எம். எஸ். செல்வராஜன்: நாட்டின் வளர்ச்சிக்கு இது போன்ற ஜாதிகள் பற்றிய எண்ணங்கள் மறைவதற்கு அடிப்படையாக அரசாங்கத் தரப்பில் அவர்களுடைய ரெக்கார்ட்டில் இருந்து சாதி பற்றிய குறிப்பை நீக்குவது ஒன்று அல்லவா? அப்படி அரசாங்கம் கருதினால் உடனடியாக அரசாங்க ரெக்கார்டில் இருந்து சாதிகளைப் பற்றிய குறிப்பை நீக்க நடவடிக்கை எடுப்பதுபற்றி ஆலோசனை செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்போது சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மனு பாரங்களில் அவ்வாறு குறிப்பிடுவதற்குரிய "காலம்" அகற்றப்பட்டிருக்கிறது. ஆனால் பிற்பட்ட சமூகத்தினர், பின்தங்கிய வகுப்பார்கள், தாழ்த்தப்பட்டவர்கள், மலைசாதியினர் இவர்களுக்குச் சில சலுக்கைகள் இருக்கின்றன. சாதிப் பற்றிய குறிப்பே எடுக்கப்பட்டுவிட்டால் அவர்கள் யார் யார் என்று கண்டு அவர்களுக்கு நலம் செய்வது கஷ்டமாக இருக்கும். ஆகையால் அடியோடு சாதியைப்பற்றிய குறிப்புகளை அரசாங்க ரெக்கார்டில் இருந்து அகற்றுவது இப்போதைக்கு சாத்தியமல்ல என்று சொன்னேன்.

Mobile courts

* 201 *Q.*—Sri V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government propose to introduce any mobile courts in the city?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There are already three mobile courts functioning in Madras City. The question of sanctioning a mobile court exclusively for trying traffic offences is engaging the attention of Government.

* 202 *Q.*—Sri A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to have mobile courts; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) There are already three Mobile Courts in Madras City for expeditious disposal of cases relating to Town Nuisances and cutting of avenue trees and a Mobile Railway Magistrate's Court for trying Railway offences. The question of sanctioning a Mobile Court exclusively for trying traffic offences in Madras City is engaging the attention of the Government. Apart from this, no other proposal to have Mobile Courts is under the consideration of Government.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இப்படி இயங்குகின்ற நீதி மன்றங்களை வைப்பதன் காரணமாக நீதி சரியாக வழங்கப்படவில்லையென்ற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? கோர்ட்டின் மூலம் இரு தரப்புகளும் விசாரணை செய்யப்பட்டு, சாட்சிகளைக் கேட்டுப் பதிவு செய்வதைவிட்டு இப்படி தெருக்களிலேயே நீதி வழங்கப்படுவது நல்லதாக அமையாது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் உணர்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நீதி வழங்குவது கட்டிடத்தைப் பொறுத்தது அல்ல. புகார் ஒன்றும் வரவில்லை. அத்தகைய புகார்களுக்கு எவ்வித ஆதாரமும் இல்லை. நீதி வழங்குவதில் துரிதமாக நீதி வழங்க வேண்டுமென்பதற்குத்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. சில்லரைக் குற்றங்களுக்கு அங்கங்கே உடனே விசாரித்து நீதி வழங்குவது என்பது இந்தத் திட்டம்.

திரு. சா. கணேசன் : இயங்கும் நீதி மன்றங்கள்மூலம் தவறுகளையும், கட்சிக்காரர்களையும் நேரில் அவர்களுடைய இடங்களிலேயே பார்த்து, விசாரித்து சரியான முறையில் இத்திட்டத்தின் மூலம் விதாயம் செய்ய முடிகிறது என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது என்றால் நகரங்களைவிட கிராமங்களில் நடக்கும் விவகாரங்களுக்கு இதை அமுல் நடத்துவது பயன் உள்ளதாக இருக்கும் என்று அரசாங்கம் கருதவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் ஒன்றை ஒப்புக்கொள்ள வேண்டும். நகரங்களில் நடப்பது போன்ற அத்தனை குற்றங்கள் கிராமங்களில் நடப்பது இல்லை. ஆகவேதான் நகரங்களுக்கு 'மோபைல் கோர்ட்டு' அவசியம்.

திரு. க. ர. நல்லசிவம் : இயங்கும் நீதி மன்றங்கள் மூலம் இப்போது எடுத்துக்கொள்ளும் நடவடிக்கை உற்சாகம் அளிக்கக் கூடியதாக இருக்கிறதா என்று கனம் நீதி அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். அப்படியானால் பெரிய குற்றங்களை விசாரிக்கவும் இதை விஸ்தரிக்க முடியுமா,

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நடைபெறுவது திருப்திகரமாக இருக்கிறது. அதனால்தான் போக்குவரத்துக் குற்றங்களுக்கும் இதை விஸ்தரிப்பது என்பது உத்தேசம்.

திரு. ஆ. கு. சுப்பையா: இயங்கும் நீதி மன்றங்களை கிராமங்களுக்கும் விஸ்தரிப்பது, பொருளாதார வசதியில் மிகவும் பிற்போக்காக இருக்கிற கிராம மக்களுக்கு அனுகூலமாக இருக்காதா என்று அறிய விரும்புகிறேன். இப்படி நீதி வழங்குவதற்கு ஆலோசிக்கப்படுமா ?

கனம். திரு. எம். பக்தவத்சலம் : நகரங்களில் நடப்பதுபோல் குற்றங்கள் கிராமங்களில் நடப்பது இல்லை என்று நான் முன்பே கூறினேன். அதைப் பற்றி நாம் பெருமைப்படவேண்டும்.

திரு. முனு. ஆதி: கிராமப்புறங்களில் சாராய வேட்டை நடக்கின்றது இல்லையா? கிராமங்களில் உள்ள ஏழைகளுக்கு உதவியாக இந்த நடமாடும் நீதி மன்றங்களை அங்கே அமைக்க அரசாங்கம் ஆலோசிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சாராய வேட்டையைப் பற்றிக் கனம் அங்கத்தினர் வருத்தப்படக் கூடாது. சாராயத்தின் மத்தியில் நீதி வழங்குவதும் முறை அல்ல.

திரு. ம. கமலநாதன்: பஞ்சாயத்துச் சட்டம் வந்தபோது கிராம கோர்ட்டுகள் மூடப்பட்டன. பஞ்சாயத்து கோர்ட் வரும் என்று அப்போது சொல்லப்பட்டது. அவற்றைத் திறக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் விடை அளிக்கிறேன்.

Engineering colleges

* 203 Q.—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the proposal to increase the admission capacity of the existing Engineering Colleges has been finalized; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. சா. கணேசன்: சமீபத்திலே எண்ணிக்கையைக் கூட்டப் போவதாகப் பத்திரிகையில் செய்தி வந்ததே. அது சரியான தகவல்தானு என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மூன்ருவது திட்ட காலத்தில் நம்முடைய என்ஜினியரிங் கல்லூரிகளில் அதிகமான மாணவர்களைச் சேர்க்க வசதி செய்ய வேண்டுமென்ற ஓர் ஆலோசனை இருந்தது. அதைப்பற்றி அகில இந்திய டெக்னிகல் கவுன்சிலுக்கு எழுதினேம். இந்தவிதமாக நான்கு கல்லூரிகளில் அதிகமாக என்ஜினியரிங் கோர்சுக்கு மாணவர்களைச் சேர்க்கவேண்டுமென்று சொன்னேம். Alagappa College of Engineering, Karaikudi, P.S.G. College of Technology, Coimbatore, Government College of Technology, Coimbatore and the Annamalai University, Chidambaram.

இங்கெல்லாம் நாம் கேட்பதுபோல அதிக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வசதி இருக்கிறதா, இல்லையா என்பதைப் பரிசீலனை செய்ய அவர்கள் ஒரு 'எக்ஸ்பர்ட் கமிட்டியை' நியமித்திருக்கிறார்கள். அந்த நிபுணர் குழுவின் சிபார்சு கிடைத்த பிறகு தான் நாம் சேர்க்க வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன்: என்ஜினியரிங் கல்லூரிகளில் இட நெருக்கடி ஏற்படுவதன் காரணமாகச் சேருவதற்கு வாய்ப்புக் கிடைக்காத மாணவர்கள் மன முறிவு ஏற்பட்டுத் தவருன முறைக்குச் செல்கிருர்கள். இதை அரசாங்கம் கவனித்து அப்படிப் பட்ட சூழ்நிலையைத் தவிர்க்க தக்க ஏற்பாடு செய்வார்களா?